9 - JUN 1982

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

வெள்ளிக்கிழமை, 1981 ஆகஸ்டு 28

ஆவணி 12, துன்மதி—திருவள்ளுவர்—2012

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

''முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்.''

முயற்சி உடையவர்களுடைய செயல்கள் அவர்களுக்குச் சிறப்பைத் தரும். செல்வாக்கு, செழிப்பை உண்டாக்கும். முயற்சி செய்யாமல் இருத்தல் ஒருவனை வறுமையில் சேர்த்துவிடும்.

1. அரசினர் தீர்மானம்.

விதி 31-ஐத் தளர்த்த

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''ஒவ்வொரு நாள் கூட்டத்தின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள் கேட்டு விடையளிப்பதற்கென்று ஒதுக்கப்பெற வேண்டும் என்றுள்ள தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 31-ஐத் இன்று தளர்த்த வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப் பெற்றது.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி* இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்]

2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

பாம்பாயீ நகரில் வாழும் தமிழர்களின் குடிசைகள் அகற்றப்படுதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் என். சங்கரய்யா, ரா. உமாநாத், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், என். பழனிவேல், டி. மணி, கே. ஆர். சுந்தரம், ப. நெடுமாறன், நவநீதகிருஷ்ண பாண்டியன், குமரி அனந்தன், ப. தீர்த்தராமன், எஸ். என். இராமசாமி, சோ. அழகர்சாமி, பொ. உத்திராபதி, எம். ஆறுமுகம், செ. சிவசாமி, எஸ். ஆண்டித்தேவர், கே. தனுக்கோடித் தேவர், அ. ரகுமான்கான் ஆகியோர் ''தமிழகத்தைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான ஏழை எளிய தமிழ் மக்கள் தம் பிழைப்புக்காக பம்பாயீ நகர சாலையோரங்களில் நீண்ட